
தினத்தந்தி
சுதந்திரதின
சிறப்பு மலர்



சுதந்திரதின கொடிகளுடன் மாணவிகளின் புன்சிரிப்பு.

# பூட்டி வைக்கப்பட்ட காலம் அல்ல இது போர்க்குரல் எழுப்பும் காலம்

ஈரோடு கொங்கு கலை அறிவியல் கல்லூரியில் சுதந்திரதின விழா நடந்தது. பேராசிரியர் கோபாலகிருஷ்ணன் தலைமையில் பேராசிரியர் ஈஸ்வரமூர்த்தி, பேராசிரியை மணிமேகலை ஆகி யோருடன் மாணவிகளும் கலந்து கொண்ட நிகழ்வு அது. அதில் பட்டொளி வீசும் மூவர்ண கொடியை ஏந்தி வந்த மாணவிகளின் தேசிய சிந்தனைகள்:

**பேராசிரியை மணிமேகலை:-** சுதந்திரம் என்ற வார்த்தை மதிப்புமிக்கது. நாட்டு விடுதலை என்ற கோணத்தில் நாம் சுதந் திரத்தை பார்த்தாலும் அன்றைய சமூகத்தின் ஒவ்வொரு படிக்கட் டிலும் சுதந்திரத்தின் தாக்கம் எப்படி இருந்தது என்பதை நாம் வரலாற்றை படித்து உணர்ந்து கொள்ள வேண்டும். வீட் டுக்குள்ளே பூட்டி வைக்கப்பட்ட பெண்கள், இன்று ஆண்களுக்கு நிகராக படிக்கிறோம். பணியாற்றுகிறோம். இதுவே சுதந்திரம் நமக்கு தந்த உரிமை. வெறும் சமையலறை பெண்களாக இல் லாமல் புதிய சமூகத்தை, புதிய சிந்தனைகளை சமைக்கின்ற பெண்களாக நாம் இருக்கிறோம். அப்படிப்பட்ட சுதந்திரத்தின் அடையாளமாக நாம் சுமந்து செல்லும் தேசியக்கொடி நமக்கு பெருமை. எத்தனையோ தியாகிகளின் ரத்தத்தில் சிவந்த மூவர் ணகொடியை நமது நெஞ்சில் ஏந்தும்போது எத்தனை பெருமை நமக்கு. அது சொல்ல முடியாத ஒரு சிலிர்ப்பு.

இனி மாணவிகளின் கருத்துக்களை கேட்போம்.

**கவுசல்யா:-** சுதந்திர போராட்டத்தில் பகத்சிங்கின் பங்கு மிகப் பெரியது. மிகச்சிறிய வயதில் இந்த நாட்டுக்காகவும் நாட்டு மக்களுக்காகவும் உயிரைக்கொடுத்த பகத்சிங்கை நினைக்கும் போது, நாம் இந்த நாட்டுக்காக என்ன செய்தோம் என்ற கேள்வி எழுகிறது. சிறுவனாக இருந்தபோதே அந்நியரை விரட்ட வேண் டும் என்று பகத்சிங் சபதம் செய்தார். இன்றைய காலகட்டத்தில் நமக்கும் பல்வேறு போராட்டங்கள் காத்து இருக்கிறது. இது சமூக முன்னேற்றம், பெண்களுக்கான உரிமை என்று விரிகி றது.

**வித்யா ஸ்ரீ:-** சுதந்திர போராட்டத்தில் பெண்களின் பங்கு மகத்தானது. எனக்கு பிடித்த மிகச்சிறந்த வீராங்கனை ஜான்சி ராணி லட்சுமி பாய். ஆங்கிலேயர்களை எதிர்த்த அந்த வீரமங் கையை நினைக்கும்போது உடல் அப்படியே சிலிர்க்கும். இன்று ஒவ்வொரு புது போராட்டங்களையும் பெண்கள் முன்னெடுத் துச்செல்ல வேண்டியவர்களாக இருக்க வேண்டும். நமது பண் பாட்டையும், கலாசாரத்தையும் பாதுகாப்பதுடன், நமது இந்தியா எப்போதும் மற்றவர்களுக்கு எடுத்துக்காட்டாக இருக்கும் என் பதை உலகுக்கு உணர்த்துபவர்களாகவும் இருக்க வேண்டும்.

**நந்தினி:-** இந்திய சுதந்திர போராட்டத்தில் முதல் பெண் வீராங்கனை வேலுநாச்சியார். அவர் நமது தமிழ்பெண் என்பது நமக்கு எத்தனை பெரிய பெருமை. ஆனால் இன்று நமது பெண் கள், படித்து முடித்ததும் ஏதேனும் வெளிநாடுகளுக்கு சென்று அங்கேயே குடியேற்றம் பெற்று விட வேண்டும் என்று எண்ணு கிறார்கள். இதுவும் ஒரு அந்நிய மோகம்தான். நாம் மீண்டும் அடிமைகளாக மாறி விடக்கூடாது. இந்தியர் என்ற பெருமையுடன் வாழ வேண்டும்.

**காவ்யா:-** கொங்கு மண்ணின் ஒப்பற்ற வீரனாக விளங்கிய தீரன் சின்னமலையின் தியாகம் சிறியதா?... சாதி வேறுபாடு களை களைந்து அனைத்து மக்களையும் திரட்டி ஆங்கிலேய ருக்கு எதிராக போர் புரியச்செய்த தீரன் சின்னமலையை நம் மண்ணின் மக்கள் மறந்துவிடவே கூடாது. ஆங்காங்கே தலை தூக்கிவரும் சாதிய வேறுபாடுகளை களைந்து அனைவரும் சகோதர, சகோதரிகளாக இருக்க வேண்டியது காலத்தின் கட் டாயம். சுதந்திரம் நமக்கு கொடுத்த ஜனநாயக உரிமையும் அதுதான். எனவே சுதந்திர தாயின் பிள்ளைகள் நாம் என்ற உணர்வுடன் இருக்க வேண்டும்.

**ஷாலினி:-** காந்தியடிகளின் அகிம்சையை கருத்தில் கொண்டு அறவழிப்போராட்டம் நடத்தி உயிர் ஈந்த திருப்பூர் குமரன் ஒரு மிகச்சிறந்த தியாகி. இன்று தேசியக்கொடியை நாம் உயர்த்திப் பிடிக்கிறோம் என்றால் அன்று மண்டை உடைந்து மயங்கிய நிலையிலும் இந்தியக்கொடியை தரையில் விழாமல் கொடி காத்த குமரனின் தியாகத்துக்கு ஈடாகாது. ஒவ்வொரு முறை நாம் தேசிய கொடியை பார்க்கும்போதும் இந்த தியாகிகளின் போராட்டம் நம் மனக்கண் முன் தெரியவேண்டும். தேசத்துக்கு ஒரு துன்பம் வருகிறது என்றால் அதற்காக களம் இறங்க இளை ஞர் படை தயாராக இருக்க வேண்டும்.

**ஆர்த்தி:-** வடநாட்டவர்களுக்கு ஒருபடி மேலாக சுதந்திர போராட்டத்தில் பங்கேற்றவர்கள் தமிழர்கள். சுதந்திர போராட் டத்தில் ஈடுபட்டு 9 ஆண்டுகளுக்கும் மேலாக சிறை சென்று மீண்டவர் கர்மவீரர் காமராஜர். சுதந்திரத்துக்கு பின்னர் தமிழ கத்தை ஆட்சி செய்து 9 ஆண்டுகள் மிகச்சிறந்த ஆட்சியை தந்தவர். சுதந்திரம் பெற்றதன் நோக்கத்தை நிறைவேற்றியவர் அவர். அரசியலில் ஈடுபடுபவர்களுக்கு முன்மாதிரியாக விளங் கியவர். அவர் மரணம் அடைந்தபோது அவர் கையில் இருந்த ரொக்கப்பணம் ரூ.150-க்கும் குறைவு என்பதே அவரது நேர்மை யான வாழ்வுக்கு அத்தாட்சி."

தினத்தந்தி ஈரோடு 14.07.2018

வரையும், அதன் கிடாரி கன்றுக்குட்டி ஒன்று ரூ.10 ஆயிரம் முதல் ரூ.23 ஆயிரம் வரையும் விற்பனை செய்யப்பட்டது.

மொத்தம் ரூ.40 லட்சத்துக்கு மாடுகள் விற்பனை செய்யப்பட்டதாக விவசாயிகளும், வியாபாரிகளும் தெரிவித்தனர்.

## கொங்கு கலை அறிவியல் கல்லூரியில்

# உலக மக்கள் தொகை தினத்தையொட்டி பேச்சு -கவிதை போட்டி

ஈரோடு, ஜூலை.14–

ஈரோடு கொங்கு கலை அறிவியல் கல்லூரியில் நாட்டு நலப்பணித்திட்டம் சார்பில் உலக மக்கள் தொகை தினத்தையொட்டி பேச்சு மற்றும் கவிதை போட்டிகள் நடைபெற்றன. 'பெருகிவரும் மக்களால் அருகிவரும் வளங்கள்' என்ற தலைப்பில் நடைபெற்ற பேச்சு போட்டியில், 3–ம் ஆண்டு ஆங்கில இலக்கிய மாணவன் எஸ்.குணசீலன் முதலிடமும், 3–ம் ஆண்டு வணிக கணினி பயன்பாட்டுத்துறை மாணவன் ஏ.ரஹீம் 2–ம் இடமும், முதலாம் ஆண்டு கணினி பயன்பாட்டுத்துறை மாணவி பா.கமலி 3–ம் இடமும் பிடித்தனர்.

தாங்குமா பூலோகம்? என்ற தலைப்பில் நடைபெற்ற கவிதை போட்டியில் 3–ம் ஆண்டு ஆங்கில இலக்கிய மாணவி வி.என்.கிருத்திகா முதல் இடமும், 2–ம் ஆண்டு முதுநிலை உயிர் வேதியியல் மாணவி எம்.முத்து அபிராமி 2–ம் இடமும், 3–ம் ஆண்டு ஆங்கில இலக்கிய மாணவி ஆர்.அனுஷா 3–ம் இடமும் பெற்றனர்.

போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவ –மாணவிகளை கல்லூரி தாளாளர் ஏ.கே.இளங்கோ, முதல்வர் என்.ராமன் ஆகியோர் பாராட்டினார்கள். இதற்கான ஏற்பாடுகளை நாட்டு நலப்பணித்திட்ட அலுவலர்கள் ப.அண்ணாதுரை, எஸ்.சுரேஷ் மற்றும் மாணவ –மாணவிகள் செய்திருந்தனர்.